142—

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் உள்ள வழக்குகளை முடிக்க தனி நீதிமன்றம் அமைத்தல்

** 20794* திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி உள்ள வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர தனி நீதிமன்றம் அமைப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை. ஏற்கனவே தமிழ்நாடு நிலச் சீர்திருத்தத் தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் பற்றியுள்ள வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர தனி நீதிமன்றம் அமைப்பது குறித்து நான் கேள்வி கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த மன்றத்தில் வழக்குகள் பைசல் ஆகாமல் லட்சக்கணக்கான வழக்குகள் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இதற்கென்று தனி நீதிமன்றம் அமைத்தால்தான் இந்த உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட அந்த நிலங்கள் பற்றிய வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவந்து அரசு அதை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியும் என்ற ஆர்வத்தின் அடிப்படையிலேதான் தனி நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். அதை மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் கூட தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்று செயல்பட்டு வருகிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன். அதற்குப் பெயர் ஸ்பெஷல் அப்பல்லேட் ட்ரிபியூனல்—சிறப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம்—ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவர் உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதி திரு. இராமலிங்கம்; துணைத் தலைவர் திரு. எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப. (ரிடையர்டு), உறுப்பினர் திரு. எம். மயில்வாகனன், இ.ஆ.ப. (ரிடையர்டு). மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

எல்லாம் விரைவாக நடைபெறவேண்டும் என்று சொன்னார்கள். தீர்ப்பாயத்தில் பெறப்பட்ட வழக்குகள் இதுவரைக்கும் 1,094; முடிக்கப் பட்ட வழக்குகள் 699. நிலுவையில் உள்ள வழக்குகள் 395. இந்த ஒரு ஆண்டில் மட்டும் 600 வழக்குகளுக்கு மேல் முடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வழக்குகள் வந்தால் விரைவிலே முடிக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது அனைவருக்கும் தெரியும். இதிலே வழக்குகள் இன்னும் அதிகமாக வந்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, எந்தத் தேதி வரை உள்ள வழக்குகள் இவை என்று எனக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அதை அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-8-1993 வரைக்கும் வந்த வழக்குகள் இவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பல இடங்களில் நிலம் எடுக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் தாங்களே வீடுகட்டி, குடியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கப்படுமா? அது மட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி எஸ். அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அந்தத் தஞ்சை மாவட்டத்தில் பலர் பினாமி பெயரில் நிலங்களை வைத்திருக்கிறார்கள். நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அந்த நிலங்களைச் சேகரித்து எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் தமிழ்நாடு சட்டத்திற்கு அவர்களைக் கட்டுப்பட்டவர்களாகக் கொண்டுவந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960 ஆம் ஆண்டு, ஒரு உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே பேசும்போது, இது உச்சவரம்புச் சட்டமா, மிச்சவரம்புச் சட்டமா என்று

சொன்னார்கள். அவர் மட்டுமல்ல. அப்போது இங்கே இருந்த பொது உடைமைக் கட்சிக்காரரர் கல்யாணசுந்தரம் அவர்கள் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் பின்பற்றி இது உச்சவரம்புச் சட்டம் அல்ல; மிச்சவரம்புச் சட்டம் என்று சொன்னார்கள். இந்தியப் பொது உடைமைக் கட்சிக்காரரர்களும், அன்றைக்கு நான் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் இதற்காகப் பலமுறை வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்; எதிர்த்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் பினாமி நிலங்களை எடுக்க சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அன்று கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு இந்தியப் பேரரசு அனுமதி தரவில்லை. மீண்டும் புரட்சித் தலைவரின் வாரிசாக வந்திருக்கிற இந்த அரசில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதே சட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக, எந்த உணர்வுக்காகக் கொண்டுவந்தார்களோ அதே சட்டத்தைக் கொண்டுவந்து, இங்கே நிறைவேற்றி 24-10-1991-ல் மத்தியப் பேரரசுக்கு அனுப்பினார்கள். இதுபற்றிய விவரம் நீண்டுகொண்டே போனாலும் நான் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். குடியரசுத் தலைவருடைய அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டது 24-10-1991. அதற்குப் பின்னால் பல நினைவூட்டுக் கடிதங்கள் 25-11-1991, 20-12-1991, 28-1-1992, 20-2-1992, 20-3-1992 ஆகிய தேதிகளில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் 13-3-1992--ல் ஒரு விளக்கம் கேட்டார்கள். அந்த விளக்கமும் தமிழக அரசின் பதில் கடிதமாக 22-4-1992-ல் அனுப்பப்பட்டது. அதற்குப் பின்னாலே பல நினைவூட்டுக் கடிதங்கள் 29-5-1992, 13-7-1992, 27-7-1992, 13-10-1992, 27-10-1992, 12-11-1992 இப்படியே அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இன்று வரைக்கும் 30,40,50 நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிறகு மத்தியப் பேரரசிலே நடைபெற்ற, இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் முன்நிலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியின் பேராலும் அவர்களுடைய கட்டளையின் பேராலும் இதை உடனடியாக ஏற்று, இந்த சட்ட முன்வடிவிற்கான அனுமதியைக் குடியரசுத் தலைவரிடம் பெற்று அனுப்பித்தர வேண்டுமென்று இன்றைக்குப் பிரதமராக இருக்கக்கூடிய நரசிம்மராவ் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. இன்னும் வரவில்லை. வந்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும். முறையற்ற முறையில் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு இந்த அரசு கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டத்தால் எடுக்கக்கூடிய மிச்ச நிலங்களை ஏழை எளிய மக்களுக்கு, நிலமற்றவர்களுக்கு வழங்குகிறபோது அந்த நிலங்களுக்கு கோர்ட் மூலமாகத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கோர்ட்டுக்குப் போகாமல் சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களை, அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களைப் பிரித்துக் கொடுக்கிறபோது, அதுகுறித்து கோர்ட்டுக்குச் செல்ல முடியாது. ஆனால், அரசு எடுக்கும்போது, அரசு எடுப்பது சரியல்ல என்று நில உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் செல்ல வழி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உணவு அமைச்சர்.

143 —

ராஜகோபாலபுரம் கிராமத்தில் அமுதம் அங்காடி ஏற்படுத்துதல்.

** 21609—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், ராஜகோபாலபுரம் கிராமத்தில் அமுதம் அங்காடி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் ராஜகோபாலபுரம் கிராமத்தில் தனியே அமுதம் அங்காடி அமைத்திட சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் ஒன்றியம், இராஜகோபாலபுரம் கிராமத்தைப் பொறுத்தவரை, அது குத்தாலம் பேரூராட்சியின் ஒருபகுதியாக இருந்தாலும், அந்தப் பேரூராட்சியை விட்டுக் கொஞ்சம் தள்ளி அமைந்திருக்கிற கிராமம் என்ற அளவிலேதான் இருக்கிறது. அங்கேயிருந்து சுமார் 3 கிலோ மீட்டர்,